# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

| | | |
|---|---|---|
| Calendar | | CC. 389/2021 |
| Miscellaneous | | |
| Preliminary Register | | Case No. of |
| Sessions | | |
| | | Prosecution அ.சா.1 |
| Deposition of Witnesses for | | Defense |
| | | Court : |

Name : பிரதீப்குமார்
Father's name : பழனிச்சாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of April 2022.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது,

முதல் விசாரணை:

நான் தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டெக்ஸ்மோ கம்பெனியில் கொத்தனாராக வேலை பார்த்தபோது மேக்னா மசாலா கம்பெனிக்கு எதிர்புறம் லைன் வீட்டில் குடியிருந்தேன். கடந்த 29.04.2021 அன்று நான் வழக்கம்போல் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 09.00 மணியளவில் வீடு திரும்பியவுடன் TN 30 CY 3913 பதிவெண் கொண்ட பல்சர் 150 இருசக்கர

வாகனத்தை எனது ரூமிற்கு முன்பாக வாசலில் நிறுத்திவிட்டு வழக்கம்போல் தூங்கச்சென்றுவிட்டு மறுநாள் காலை 06.30 மணியளவில் நான் வெளியே வந்து பார்த்தபோது எனது வண்டியின் சைடு லாக் மட்டும் உடைந்த கீழே கிடந்தது. வண்டியை காணவில்லை. அக்கம்பக்கம் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டடப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார்வாக்குமூலம்தான் அது. அந்த புகார் வாக்குமூலம் **அசாஆ 1** ஆகும். அதன் பின்னிட்டு ஒரு வாரம் கழித்து போலீசார் என்னை தொடர்புகொண்டு வண்டியை கண்டுபிடித்துவிட்டதாக கூறினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில் உள்ள இருசக்கர வாகனம்தான் அது. அந்த புகைப்படங்கள் **அசாபொ 1 மற்றும் 2** ஆகும். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

29.04.2021 அன்று எனது வண்டி காணாமல்போனது. நான் எனது கம்பெனியின் 4 கி.மீ சுற்றளவில் தேடிப்பார்த்தேன். கிடைக்கவில்லை. நான் மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனது வாகனம் தொலைந்ததை தொடர்ந்து நான் எனது அண்ணனுக்கு கைபேசியில் தகவல் தெரிவித்தேன். நான் கம்பெனியில் வேலை செய்ததால் எங்கள் இஞ்சினியரை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க காலதாமதமானது. நான் போலீசாரிடம் எனது வாகனத்தின் பதிவு சான்று நகலை கொடுத்துள்ளேன். அது போலீசார் விசாரணையில் காணப்படவில்லை என்றால் நான் கொடுத்துள்ளேன். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் போட்ட புள்ளிவிபர கணக்கிற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது பொறியாளர் மூலமாக எனது புகாரினை எழுத்துபூர்வமாக பதிவு செய்து நான் கையொப்பமிட்டு காவல் நிலையத்தில் கொடுத்தேன். எனக்கு குடிப்பழக்கம் எதுவும் இல்லை. நான் கம்பெனி வளாகத்திற்குள் குடியிருப்பதால் அதற்கு அனுமதியும் கிடையாது. என்னுடைய வாகனத்தை யார் திருடினார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. நாங்கள் பணியில் இருந்து விடுப்பு எடுப்பதற்கு

எழுத்துபூர்வமான கடிதம் எதுவும் கொடுக்கவேண்டிய கட்டாயம் கிடையாது. பொறியாளர் அலுவலகத்தில் தகவல் தெரிவித்தாலே போதுமானது. எங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை நிறுவனத்தின் அலுவலக விடுமுறை. ஏனைய நாட்களில் உடல்நிலைய சரியில்லாத மற்றும் வேறு காரணங்களுக்காக விடுப்பு எடுத்திருக்கலாம். நான் இவ்வழக்கு புகாருக்கு பின்னிட்டு நான் நிறுவனத்திற்கு வேலைக்கு செல்வதில்லை. வருகை பதிவேடுகளில் குறிப்பு உள்ளது. எனக்கு கடந்த 1 மாதமாக விபத்து எதுவும் எற்படவில்லை.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/K.Chelliah
Judicial Magistrate No.I,
Pollachi(FAC)